# இல்லம்

## செய்தி மடல்

**VOLUME O1 ISSUE 2006/4 OCTOBER – DECEMBER 2006**

# வீட்டு உரிமையாளர் மூலமான மீள்நிர்மாணச் செயல்திட்டம் அதன் செயன்முறைத் தந்திரோபாயமும் பலமும் பலவீனங்களும்

## டாக்டர் நாராயணன் எடாடன் -



டாக்டர் நாராயணன் எடாடன், திட்டப் பணிப்பாளர் திரு செ.பத்மநாதன் ஆகியோர் மன்னார் மாவட்டத்தில் வரவேற்கப்பட்டனர்



டாக்டர் நாராயணன் எடாடன் தற்போது உலகவங்கியின் சிரேஷ்ட வீடமைப்பு ஆலோசகராகக் கடமையாற்றுகின்றார். முன்னர் இவர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நகராக்கற் துறையின் ஆலோசகராகவும் பணியாற்றினார். ஐக்கிய நாடுகள் அபிவித்தித் திட்டத்தின் நகர திட்டமிடல் பிரதி அமைச்சின் திட்டமிடல் மதியுரைஞராகவும் இந்தியாவின் அகமதாபாத்திலுள்ள திட்டமிடல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைக்கல்லூரியின் இணைப் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

டாக்டர் நாராயணன் உயர் வாண்மையாளராவார். ஐக்கிய இராச்சியத்தின் நகர திட்டமிடலாளர்களுக்கான றோயல் இன்ஸ்ரிரியூட்டினால் பட்டய நகராக்க மற்றும் பிராந்திய திட்டமிடலாளராக அதிகாரமளிக்கப்பட்டவராவார். இவர் SPI நிறுவனத்தில் அபிவிருத்தி நிதியியலில் டாக்டர்பட்டமும், நகராக்க கற்கையில் டாக்டர் பட்டத்திற்கு பின்னைய பட்டங்களையும் பெற்றவராவார். இவர் ஐக்கிய அமெரிக்க நாட்டின் MIT யின் வருகைதரு விரிவுரையாளராகவும் விளங்கியவராவார். டாக்டர் நாராயணன் எடாடன் நகரஅபிவிருத்தி மற்றும் மாநகர மீளமைப்பு, வீடமைப்பு நிதி மற்றும் கொள்கைகள், நுண்நிதியியல் மற்றும் அபிவிருத்திப் பொருளியல் தொடர்பாக பல்வேறு நூல்களையும் ஆய்வுக்கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார்.

**ஓர் வீட்டில் வாழ்தல் என்பது நான்கு சுவர்களுக்கிடையிலானதோ, அதற்காக பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்களோ அல்லது அதற்காக செலவிடப்பட்ட நேரமோ அல்லது பணம் மாத்திரம் அல்ல. அதற்கு மேலானது எமது வாழ்க்கையின் முக்கியமான நடவடிக்கைகளான பிறப்பு தொடக்கம் இறப்பு வரையிலான நிகழ்ச்சிகளோடு எமது மகிழ்ச்சி, துக்கம் என்பனவற்றை உருவாக்கும் ஒரு இருப்பிடமும் செயலாக்க இடமுமாகும். அது எமது விழுமியங்களின் இருப்பிடாமாகவும், கலாச்சாரத்தின் பிறப்பிடமாகவும், எமது தனித்துவத்தின் இலச்சினையாகவும் உள்ளது. நாம், அதில் யார் வாழப்போகின்றார்கள் அதில் யார் வாழமாட்டார்கள் என்ற எண்ணம் இன்றி எமது வீட்டை கட்டுகின்றோம், அதனை எமதாக்கின்றோம்.**

உலகில் இயற்கை அனர்த்தங்களாகிய புவியதிர்ச்சி, வெள்ளம், சூறாவளி மற்றும் சுனாமிக் கடல் பேரலை என்பனவும் மனிதர்களால் உருவாக்கப்படும் அனர்த்தங்களாகிய இனமோதல் போன்றவையும் உலகம் பூராவும் இலட்சக்கணக்கான மக்களை தொடர்ந்து பாதித்து வருகின்றது. இந்த அனர்த்தங்களுக்கு உள்ளாகுவோர் வறுமையான மக்களாகும். இதற்கு இம்மக்கள் இயற்கை அனர்த்தங்கள் தாக்கக்கூடிய பாதுகாப்பற்ற இடங்களில் தமது வாழ்விடங்களை அமைத்து கொள்வதும், வீடுகளில் அதிகமானவர்கள் நெருக்கமாக வாழ்வதும் காரணமாகும்.

சர்வதேச அனர்த்த மீள்கட்டுமாண அனுபவம், நீண்டு நிலைத்திருக்கக்கூடிய வீட்டு மீள்நிர்மாணம் என்பது பல்வேறுவிதமான தந்திரோபாய அணுகுமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும் என விதந்துரைக்கப்பட்டுள்ளது. வீடுகள் உள்ளூரில் கிடைக்கும் கட்டிட மூலப் பொருட்களையும், தொழில்நுட்பத்தையும் கொண்டு கட்டப்படுகின்றன. அத்துடன் வீட்டு மீள்நிர்மாணம் அதனது உரிமையாளரையும், சமூகப் பங்களிப்பையும் கொண்டு செயல்படுத்தப்படுகின்றது. அத்துடன் நீண்ட கால வீட்டு காப்புரிமைத் திட்டத்தின் மூலம் வீட்டின் மீள்நிர்மாணச் செலவுகள் பல பங்குதாரர்களுக்கு இடையே பகிரப்படுகின்றது.

### வீடு மீள்நிர்மாண உதவிக் கொள்கையின் வளர்ச்சி

மீள்நிர்மாணத்திற்கான அரச கொள்கைகள் பல சந்தர்ப்பங்களில் அரசாங்கம், சர்வதேச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் சிவில் சமூக அமைப்புகளினிடையே இடையிடையே விவாதத்திற்கு உட்பட்டவையாக உள்ளன. இதில் ஒரு கொள்கையென்னவெனில் நட்டஈட்டுக் கொள்கையை கொண்டதாக அதாவது காப்புறுதி நோக்க அடிப்படையானதோடு மக்களுக்கு ஏற்பட்ட நட்டத்தின் பெறுமதியை ஈடு செய்வது என்பதையும் அடிப்படையாகக் கொண்டது




தொடர்ச்சி 3ம் பக்கம்....

# நன்றி தெரிவிக்கும் பயனாளிகள்

## சுதந்திரமாக எங்களால் சுவாசிக்க முடிகிறது



**அகமது லெப்பே மீரா உம்மா**

**பாலைநகர்,**

**மட்டக்களப்பு,**

எனது கணவர் இங்குள்ள பள்ளிவாசல் ஒன்றில் உதவியாளராகப் பணியாற்றிவருகின்றார். மிகக் குறைந்த சம்பளமே அவருக்கு வழங்கப்படுகிறது. எங்களுக்கு நான்கு பெண்பிள்ளைகளும் ஒரு ஆண்பிள்ளையும் உள்ளனர்.

இனக்கலவரம் ஏற்பட்டதைத் தொடர்ந்து எனது குடும்பத்துடன் கதுறுவெல, சேனபுர ஆகிய இடங்களுக்கு நாங்கள் இடம்பெயர்ந்து சென்றோம். அகதி முகாம்களில் எனது பிள்ளைகளுடன் நான் அனுபவித்த துன்பங்கள் எண்ணிலடங்கா. நாட்டில் சமாதான சூழ்நிலை உருவாகியதைத் தொடர்ந்து 2002 ஆம் ஆண்டில் மீண்டும் பாலைநகருக்கு வந்து குடியமர்ந்தோம். ஒரு சிறு குடில் அமைத்து அதிலேயே நாங்கள் வாழ்க்கை நடத்தினோம். இடவசதி இன்மை, வருமானம் போதாமை காரணமாக நோயினாலும் பசிபட்டினியாலும் நாங்கள் வாடினோம். பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்ல முடியாத அவலநிலையும் உருவானது.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்திலேயே எமது வீட்டினை மீள்நிர்மாணம் செய்வதற்கான உதவியை நேர்ப்திட்டம் வழங்க முன்வந்தது. இந்ததிட்டத்தின் மூலம் வீடு மீள்நிர்மாணத்துக்காகக் கிடைத்த இரண்டரை இலட்சம் ரூபா மிகப்பெரிய உதவியாகும். நானும் கணவரும் பிள்ளைகளுமாகச் சேர்ந்து இந்த வீட்டைக் கட்டிமுடித்துள்ளோம். இப்பொழுதுதான் சுதந்திரமாக எங்களால் சுவாசிக்க முடிகிறது. பிள்ளைகள் ஒழுங்காக பாடசாலை சென்று வருகின்றனர். அவர்கள் படிப்பதற்கென ஓர் அறை பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. நாங்கள் வாழ்வதற்கு மட்டுமன்றி எமது பிள்ளைகள் படித்து வாழ்க்கையில் முன்னேறுவதற்கும் வழிகாட்டியாக விளங்கும் உலக வங்கிக்கும் நேர்ப் திட்டத்திற்கும் நாம் என்றும் நன்றியுடையவர்களாவோம்.

## கௌரவத்தையும் பாதுகாப்பையும் தேடித்தந்தது நேர்ப் திட்டம்



**திருமதி இரங்கநாதன் குளோரி மக்டெலின்**

**இலுப்பைக்குளம்,**

**திருகோணமலை**

எனது குடும்பத்தின் பொறுப்பினை எனது தலையில் சுமக்கவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு உருவாகியுள்ளது. என்னையும் எனது மூன்று குழந்தைகளையும் தவிக்கவிட்டு எனது கணவன் வேறாக வாழ்ந்து வருகிறார். எனது தலைவிதியை நொந்தபடி எனது மூன்று குழந்தைகளுடனும் நான் பல சவால்களுக்கு முகம்கொடுத்தபடி வாழ்ந்து வருகிறேன். உணவு, உடை, உறையுள், உழைப்பு, பாதுகாப்பு, கல்வி போன்ற எந்த அடிப்படை வசதிகளும் இன்றி நான் கஷ்ரப்பட்டேன். 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த நெருக்கடி காரணமாக நான் எனது கிராமத்தைவிட்டு நிலாவெளிக்கு இடம்பெயர்ந்து சென்றேன். 1996 ஆம் ஆண்டு கிராமத்திற்குத் திரும்பிவந்து சிறுகுடிசை அமைத்து அதில் வாழ்ந்து வந்தேன்.

குடும்பத் தலைவன் இன்றி தனியாக நின்று தவிக்கும் எனது நிலையை நேர்ப் திட்டம் இனங்கண்டது. எனது குடும்பத்திற்கான வீடு ஒன்றை மீள்நிர்மாணம் செய்வதற்கு இத்திட்டம் உதவ முன்வந்தது. எனக்கும் எனது பிள்ளைகளுக்குமான பாதுகாப்பைத் தேடிக்கொள்வதில் மிக்க ஆர்வமாக இருந்த நான் திட்டம் தந்துதவிய பணத்தில் இந்த வீட்டினைக் கட்டிமுடித்துள்ளேன். நானும் குழந்தைகளும் வீடுகட்டும்போது கட்டடப் பணியாளர்களுடன் சேர்ந்து வேலை செய்தோம். இன்று பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கு எனக்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது.

முன்பள்ளி ஆசிரியையாகச் சேவையாற்றுவதன் மூலம் சிறுவருமானம் எனக்கு கிடைக்கின்றது. இது தவிர வீட்டில் கோழிவளர்ப்பு, பயிர்ச் செய்கை ஆகியவற்றில் ஈடுபடுவதன் மூலம் எனது குடும்பத்துக்கான வருவாயைத் தேடிக்கொள்கிறேன்.

கணவனை பிரிந்து வாழும் எனக்கு உலகவங்கி பாதுகாப்பான ஒரு வாழ்க்கையை அமைத்துத் தந்தமைக்காக நானும் எனது குழந்தைகளும் என்றென்றும் நன்றியுடையவர்களாவோம்.

## குடியிருக்கும் வீட்டைக் கணிப்பிற்கொண்டு சமூக அந்தஸ்தை நிர்ணயிக்கும் காலம் மலையேறிவிட்டது



**செல்லத்துரை வரதராசா**

**இக்கிரானை,**

**யாழ்ப்பாணம்**

காலம் காலமாக எமது கிராமம் சமூகரீதியாக ஒதுக்கப்பட்டு வந்துள்ளது. பொருளாதாரம், கல்வி, தொழில் துறைகளில் நாங்கள் புறக்கணிக்கப்பட்டு வந்தோம். எங்கள் ஊரில் கல்வீடு என்பது சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்திலுள்ளோருக்கு மட்டுமே வாய்க்கப்பெறும் ஒன்றாக விளங்கியது. குடிசையில் வாழ்ந்த எங்களை எவருமே கணக்கிலெடுப்பதில்லை.

இருந்தபோதிலும் நாங்கள் சிறுகச்சிறுக எங்கள் அடிப்படைத் தேவைகளை தேடிக்கொள்வதற்கான முயற்சிகளில் இறங்கினோம். என்னுடைய வீட்டிலே சிறு கிணறு ஒன்றை அமைத்துக்கொண்டேன். அதுபோன்றே மலசலகூடம் ஒன்றையும் அமைத்துக்கொண்டேன். இருந்த போதிலும் எனது குடும்பம் நிம்மதியாக வாழ்வதற்கான கல்வீடு ஒன்றைக் கட்டுவதென்பது பகற்கனவாகவே தோன்றியது.

அடிக்கடி ஏற்பட்ட மோதல்களின்போது எமது சிறு ஓலைக் குடிசைகள் நிர்மூலமாக்கப்பட்டன. பலதடவைகள் கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்து செல்லும் அவலத்துக்கு உள்ளானோம். திரும்பிவரும் போது வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டிருக்கும். இப்படியான ஒரு நிலையில்தான் உலக வங்கியின் வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்திற்காக எமது கிராமமும் தெரிவுசெய்யப்பட்டது. இந்தக் கிராமத்தில் சுமார் 21 வீடுகளை மீள்நிர்மாணம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எங்களுக்குக் கிடைத்த இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி நாங்கள் யாவருமே கிடைத்த நிதி உதவியைக் கொண்டு வீடுகளைக் கட்டிமுடிப்போம். அதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

குடியிருக்கும் வீட்டைக் கணிப்பிற்கொண்டு சமூக அந்தஸ்தை நிர்ணயிக்கும் காலம் மலையேறி விட்டது. இனிமேல் நாங்கள் சமூகத்தில் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல. பாரம்பரிய சமூக அந்தஸ்து உள்ளவர்கள்போன்று நாமும் எமது அந்தஸ்த்தில் விரைவில் உயர்ந்திடுவோம்.

## இனி ஒருபோதும் இடம்பெயரமாட்டோம்.



**ஏ.ஜி. விமலாவதி**

**சதாம்நகர்**

**தம்பலகாமம்**

1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சதாம்நகர் குடியேற்றத்தின்போது நான் அங்கு குடியமர்ந்த மூத்த தலைமுறையைச் சேர்ந்தவளாவேன். அன்றிலிருந்து இந்தக் கிராமத்தின் தொண்டராக நான் செயலாற்றி வருகிறேன்.

இந்தக் கிராமத்தில் குடியமர்ந்த காலத்திலிருந்து நாட்டில் இடம்பெற்ற இனவன்முறைகள் ஒவ்வொன்றின்போதும் நாங்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளோம். ஆனால் இந்தக் கிராமத்தில் வாழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் என்றுமே முரண்பட்டதில்லை. எல்லா இனத்தினரும் அன்னியோன்னியமாகவே வாழ்ந்து வருகிறோம். என்னையும் எனது மூன்று பெண்பிள்ளைகளையும் எனது கணவன் கைவிட்டுச் சென்றபோதிலும் இந்த கிராமமக்களே எங்களுக்குப் பாதுகாப்புத் தருகின்றனர். இத்தனைக்கும் மேலாக எனது மகள் ஒருத்தி தமிழர் ஒருவரையே திருமணம் செய்து சந்தோசமாக வாழ்கின்றார்.

அடிக்கடி கிராமத்தின் வெளியே இருந்துவரும் அழுத்தங்கள் காரணமாக வீடு உட்பட எமது அனைத்து உடைமைகளையும் இழந்து நின்ற எங்களுக்கு வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம் இந்த வீட்டினை அமைப்பதற்கு நிதியுதவியும், தொழில்நுட்ப ஆலோசனையும் வழங்கியுள்ளது. நாங்கள் எவருமே எதிர்பாராமல் கிடைத்த மிகப் பெரும் பாக்கியமாகவே இதனை நான் கருதுகிறேன். எங்களுக்கான நிரந்தரமான வதிவிடம் ஒன்று வாய்த்து விட்டதனால் இந்தக் கிராமத்தை விட்டு நாம் இனி ஒருபோதும் இடம்பெயரமாட்டோம்.

1ம் பக்க தொடர்ச்சி.......

இதில் இரண்டாவது அணுகுமுறை என்னவெனில் மக்களை மீள தங்களின் வீடுகளுக்கு திரும்பிச் செல்வதை நிச்சயப்படுத்திக் கொள்வதை நோக்காகக் கொண்டது. இது மக்கள் தமக்கான அடிப்படை வாழ்விடத்தை அமைப்பதற்கான குறைந்தபட்ச உதவியை செய்வதாகும்.

இந்த இரண்டாவது அணுகுமுறை என்பது இரு பரிமாணங்களைக் கொண்டது. அதில் ஒன்று பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு தாமே உதவும் தொடர்புடைய பொருளாதார அமைப்பை மையமாகக் கொண்டது. இவ் உதவித் திட்டம் என்பது பாதிக்கப்பட்ட வீட்டின் தன்மை / அளவு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறுவிதமான கொடுப்பனவு முறைகளை உள்ளடக்கியதாகும். மற்றையது பாதிக்கப்பட்ட வீட்டின் பெறுமதியைக் கணக்கில் எடுக்காது ஒரேயளவான கொடுப்பனவு முறையைக் கொண்டதாகும். இந்த இரு அணுகுமுறைகளது செயற்பாடு என்பது அழிவின் அளவு, சமூகத்தின் பெறுமதி எந்தவிதமான அளவான வளங்களை சேர்க்கக்கூடிய தன்மையை பங்குதாரர்கள் கொண்டுள்ளார்கள், அரசாங்கத்தினதும், அபிவிருத்தி பங்குதாரர்களாலும் எவ்வளவு தொகைக்கான நிதி உதவியை அளிக்க உள்ளார்கள் என்பதில் இந்த இரண்டு மாற்றுத் திட்டங்களினது செயற்பாடுகள் தங்கி உள்ளது.

எந்தவிதமான பல்நாட்டு அபிவிருத்தி உதவி நிறுவனங்களும் வீடமைப்பு போன்ற தனி குடும்பங்களின் உதவிக்கான கொடைகளையோ அல்லது கடனையோ ஓர் அவசர கால சீரமைப்பின் கீழ் மாத்திரமே வழங்குவதை நியாயப்படுத்தி வருகின்றன.



கட்டுமான வேலைகளில் ஈடுபட்டிருக்கும் பெண் பயனாளி ஒருவர்

தனியார் சொத்துக்கள், சேவைகளுக்கு அனர்த்தத்தினால் ஏற்பட்ட இழப்புக்களை மீள்நிர்மாணம் செய்வதற்கான அளவு அந்த அனர்த்தத்தின் அளவு, அழிவின் ஆழம் மற்றும் தொடர்புடைய நலிவின் தன்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அதே நேரம், தனியார் சொத்தான வீடு போன்றவற்றுக்கான மீள்நிர்மாண உதவியின் அளவு என்பது மக்கள் மீள தமது இருப்பிடங்களுக்குச் செல்லுதல் என்ற அளவின் வரையறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதிகமான சந்தர்ப்பங்களின் உதவியின் அளவுகள் விரிவாக்கம் என்பன அனர்த்தத்தினால் பாதிப்படைந்த சமூகத்திற்கு அடிப்படை குறைந்தபட்ச வீட்டளவில் அடிப்படை வசதிகளுடன் கூடியதாக வரையறுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக மீள்நிர்மாணிக்கப்படும் வீட்டுக்கான உதவிகள் குறைந்தபட்ச அளவு நிர்ணயிக்கப்படாதவிடத்தும், இது எவ்வளவு உதவித் தொகையை அரசாங்கம் கடனாக / உதவியாக திரட்டக் கூடியதாக உள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்கள் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளடங்கலாக உதவியாகவும், கடனாகவும் அரசாங்கம் எவ்வளவு நிதியைத் திரட்டக் கூடியதாக உள்ளது என்பதில் தங்கியுள்ளது.



இதன் அடிப்படையில் மீள்நிர்மாணம் செய்யவும் வீட்டின் சாதாரண குடும்பத்தவர்கள் குறைந்தபட்ச அளவு 20 சதுர மீற்றர் (sq. mt.) க்கும் 50 சதுர மீற்றர் (sq. mt.) க்கும் இடைப்பட்டதாக இருக்கும்.

## பல்வேறு மீள்நிர்மாண அணுகுமுறைகளது விருப்புரிமைகள் (Options)

பரந்தளவில் நோக்குவோமாகின் வீடு மீள்நிர்மாண தந்திரோபாயம் என்பது பல்வேறு வீடு மீள்நிர்மாண அணுகுமுறைகளை உள்ளடக்கியதாக உள்ளது. அதாவது, ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு கட்டுவிப்பது, அரசாங்க பொது சேவையின் மூலம் கட்டுவது உரிமையாளர்களைக் கொண்டு கட்டும் நடைமுறை என்பனவாகும்.

உரிமையாளர்கள் தமது பாதிப்படைந்த வீடுகளைத் தாமே மீள்நிர்மாணிக்கும் நடைமுறை என்பது அரசாங்கத்தின் அபிவிருத்திப் பங்காளிகள், சிவில் நிறுவனங்களது நிதி, தொழில்நுட்ப உதவியுடன் அனர்த்தத்தினால் பாதிப்படைந்த சமூகமே இம் மீள்நிர்மாண செயற்பாட்டை பொறுப்பேற்று செயற்படுத்துவதை முதனிலைப்படுத்துகின்றது.

துருக்கி, ஈரான், மெக்சிக்கோ, லதூர் ஆகிய நாடுகளில் அனர்த்தத்தின் பின்னரான வீட்டு மீள்நிர்மாணத்தின் அமைவானது ஒப்பந்தக்காரர்களின் மூலம் நிறைவேற்றப்பட்ட பொழுதும் பாதிக்கப்பட்ட உரிமையாளர்களைக் கொண்டு பெரிய அளவிலான வீடுகள் வெற்றிகரமான மீள்நிர்மாணம் செய்யப்பட்ட அணுகுமுறை 2001ம் ஆண்டு வடஇந்தியாவின் குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட புவி அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட 880,000 வீடுகளை மீள்நிர்மாணம் செய்வதற்கு கடைப்பிடிக்கப்பட்ட அணுகுமுறையாகும்.

## உரிமையாளர்களைக் கொண்டே மீள்நிர்மாணம் செய்யும் அணுகுமுறையின் செயல்பாட்டு முறைமைகள்

உரிமையாளர்களைக் கொண்டு உரிமையாளர்களினால் தமது பழைய இடத்தில் மீள்நிர்மாணிக்கப்படுவதற்கும், வீட்டு மீள்நிர்மாணத் திட்டத்திற்கும், வேறோர் இடத்தில் ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு கட்டப்படும் வீட்டு கட்டுமாண நடவடிக்கைக்கும் பொதுவான தத்துவார்த்த வேறுபாடுகள் உள்ளன. செயற்பாட்டில், முன்னிருந்த காணிகளில் ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு கட்டப்படுவதும், உரிமையாளர்களால் மீள்நிர்மாணம் செய்யப்படுவதுமான இரு நடைமுறைகள் உள்ளன.

தொடர்ச்சி 5ம் பக்கம்....

# வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டமும் சமூக அபிவிருத்தியும்

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம் 34745 வீடுகளை மீள்நிர்மாணிக்கும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றது. இத் திட்டத்தினால் வடக்கு கிழக்கில் பல்வேறுபட்ட அபிவிருத்திகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏற்பட்டுள்ளன. அதில் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அதிகளவு நன்மைகளையும், ஏனைய கிராமத்தவர்கள் அதிகளவு தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் அதிகளவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நலிவுற்ற குடும்பங்கள் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் பயனாளிகளாலேயே தமது வீட்டினை மீள்நிர்மாணிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு ஏற்றவகையில் அவர்களை வலுவூட்டி, தம்மில் தாமே சுயநம்பிக்கையையும், கூட்டான நடவடிக்கையையும் ஏற்படுத்திய திட்டம் இதுவாகும். அதனுடன் தெரிவு செய்யப்பட்ட குடும்ப அங்கத்தவரிடையே ஒற்றுமையையும், கூட்டுச் செயற்பாட்டையும், கணவன் மனைவியிடையே நம்பிக்கைத் தன்மை, பால்நிலை சமத்துவத்தை ஏற்படுத்திய திட்டம் இதுவாகும்.

தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் இயங்கிவரும் சமூகம் சார்ந்த அமைப்புக்களை வலுப்படுத்தவும், அவைகளின் செயல் திறனை அதிகரிக்கவும், வினைத்திறனுடையதாக்கும் நோக்கில் கிராமிய புனர்வாழ்வுக்குழு அமைக்கப்பட்டு, அவற்றுக்கு முறைப்படி விழிப்புணர்வூட்டி பயனாளிகள் தெரிவு, தெரிவுக்கு எதிரான ஆட்சேபணைகள், போன்ற செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடுவதுடன், மீள்நிர்மாணத்தின் போது திறன்வாய்ந்த கட்டுமானத் தொழிலாளர்களை பயனாளிகளுக்குத் தருவித்துக் கொடுத்தல், தேவையான கட்டுமானப் பொருட்களை பயனாளிகள் பெறுவதற்கு உதவுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நீண்ட கால சமூக அபிவிருத்திக்கு சமூகம் சார்ந்த அமைப்புக்கள் தயாராக்கப்படுகின்றன.

கட்டுமானத் தொழிலாளர்கள் பற்றாக்குறையான கிராமங்கள் அல்லது பிரதேசங்கள் இனங்காணப்பட்டு அங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கான குறுங்கால தொழில் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களை, இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகளில் ஈடுபடுத்தி திறன் வாய்ந்த தொழிலாளர்களாக உருவாக்குவது எதிர்கால நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு இன்றியமையாத ஒரு திட்டமாக இத்திட்டம் விளங்குகிறது.

அத்தோடு மாவட்ட மட்ட, பிரதேச செயலக மட்ட உத்தியோகத்தர்களுக்கு இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான எண்ணக்கரு விளக்கத்தையும், உத்தியோகத்தர்களுக்குத் தேவையான காகிதாதிகள், தளபாடங்கள், கணனி என்பன வழங்கப்பட்டு இவ் அபிவிருத்திப்பணி துரிதப்படுத்தப்படுவதுடன் நீண்டகால நிறுவன அபிவிருத்திக்கு இத்திட்டம் உறுதுணையாக உள்ளது.



சாம்பல்தீவில் மீள்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை திறப்பதற்காக வருகைதரும் பிரதம விருந்தினரை வரவேற்க காத்திருக்கும் பயனாளிகள் குடும்ப சிறார்கள்.

இத் திட்டம் பயனாளிகளுக்கு நேரடியான மற்றும் மறைமுகமான நன்மைகளை வழங்குகின்றது.

<u>நேரடியான நன்மைகள்.</u>

நிரந்தர வீடு, பொருளாத முன்னேற்றம், தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்தல், சுகாதார நிலை மேம்படல், கல்வி வளர்ச்சி அதிகரித்தல்.

<u>மறைமுகமான நன்மைகள்.</u>

ஏனைய சமூக அடிக்கட்டுமான வசதிகள் ஏற்படல், போக்குவரத்து வசதிகள் அதிகரித்தல், உள்ளூர் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படும், தன்னிறைவுப் பொருளாதாரம் கட்டியெழுப்பப்படும்.

இத்திட்டத்தின் மூலம் நிரந்தர வீடு, காணி உரித்தாவணம், வங்கிக் கணக்கு போன்ற தொட்டுணரக்கூடிய நன்மைகளையும் தன்னிறைவு மனநிலை, சமூக அந்தஸ்து உயர்ச்சி, வேலை வாய்ப்பு, சமூக ஒன்றுகூடல்கள், புதிய உறவுகள் உருவாதல், குடும்ப நல்லுறவுகள் போன்ற தொட்டுணர முடியாத நன்மைகள் போன்றவற்றையும் மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

வீட்டினை அமைத்தல், அதில் தமது குடும்பத்துடன் இனிது வாழ்தல் மற்றும் தமது இல்லறக் கடன்கள், நீத்தார் கடன்கள் ஆகியவற்றை ஆற்றும் கலாசார பாரம்பரியங்களையும் மக்கள் நிறைவேற்றி வருகின்றனர்.

# சுற்றாடல் பாதுகாப்பும் விவசாய மற்றும் மரம்வளர்ப்புத் திட்டமும்

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம் தனது செயற்பாட்டு எல்லைகளை விரிவுபடுத்திவருகின்றது. அது ஒரு சமூக அபிவிருத்தித்திட்டமாக தன்னை வளர்த்துக்கொண்டுள்ளது. வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம் போன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக வருடம்தோறும் பெருமளவு மரங்கள் வெட்டப்படுகின்றன. யுத்த நடவடிக்கைகள் காரணமாக பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. வீட்டுத்தேவைக்காக வெட்டப்படும் மரங்களில் 30% பனையும், 50% தென்னையும் மிகுதி காட்டுமரங்களுமாகும். இதனால் கிராம மட்டத்திலான பசுமை மூடுபடை குறைக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக பின்வரும் சுற்றாடல் தாக்கங்கள் அதிகரிக்கின்றன.

- மண் அரிப்பு வீதம் கூடுகிறது.
- நிலக்கீழ் நீர் மட்டம் கீழ்நோக்கி செல்கின்றது.
- உயிர் பல்வகைமை பாதிப்படைகிறது
- உள்மட்ட காலநிலையில் மாற்றம் ஏற்படுகிறது

இப்பிரச்சினையை ஓரளவேனும் குறைக்கும் நோக்கில் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டமானது ஒவ்வொரு பயனாளிக்கும் விவசாய மரக்கன்றுகளையும், வீட்டுத் தோட்டத்திற்கான நாற்றுக்களையும் வழங்கி சுற்றாடல் மேம்பாட்டு திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.



பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன.

இதன்கீழ் ஒவ்வொரு பொருத்தமான பயனாளிக்கும் தென்னங்கன்று02 / 03,மாங்கன்று 01,தேசி / தோடை 02 தேக்கு / மகோகனி / வேம்பு 02 மற்றும் பொருத்தமான இடத்திற்கு ஏற்ப பழமரக்கன்றுகளும் வழங்கி வருகின்றது.

இதன் அடிப்படையில் கட்டம் 1, 11 பயனாளிகளுக்கு 08 மாவட்டங்களிலும் 71,500 தாவர கன்றுகள் நவம்பர்/டிசம்பர் மாதத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மேற்குறிப்பிட்ட சுற்றாடல் பிரச்சினைகள் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு வீட்டு சுற்றாடலை பசுமையாக பேணி வீட்டு வருமானத்தையும் உயர்த்த வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3ம் பக்க தொடர்ச்சி.......

எவ்வாறெனினும் வேறு இடத்தில் கட்டப்படும் திட்டத்திலும் பார்க்க தனது முன்னைய காணியில் உரிமையாளர் தனது வீட்டை மீள்நிர்மாணம் செய்யும் பொழுது அவரது பங்களிப்பு அதிகமாக உள்ளது.ஏனெனில், உரிமையாளர் தாமே மீள் கட்டுமாணம் செய்யும் பொழுது பலவிதமான செயற்பாட்டு வடிவங்களில் ஈடுபடக்கூடியதாக உள்ளது. உரிமையாளர்கள் தமது வீட்டு மீள்நிர்மாணத்தில் ஈடுபடும் திட்டம் கீழ்க் குறிப்பிடப்படும் கொண்டதாக அமையும் :



## சுய உதவி அணுகுமுறை

இதுவே முழுமையான உரிமையாளரைக் கொண்டு செயற்படுத்தும் திட்டத்தின் அடிப்படையான அணுகுமுறையாகும். இவ் அணுகுமுறையின் கீழ் புனர்நிர்மாணத்தின் போது நிதி நன்கொடையும், தொழில்நுட்ப உதவியும் அரசாங்கத்தாலும் அல்லது பங்குதாரர்களினாலும் கிடைப்பதோடு அதற்கு மேலதிகமாக பயனாளி தனது நிதியையும், சேவையையும் வழங்கலாம். இந்த அணுகு முறையின் அடிநாதம், தேவையான மனித வளமும், கட்டிடப் பொருட்களும் இலகுவில் கிடைக்கக்கூடியதாக இருப்பதேயாகும். வீட்டின் வரைபடம் இலகுவானது. உள்ளூர் சமூகம் பரஸ்பரமாக தங்களது வீடுகளை தாமே கட்டிக் கொள்ளும் தன்மை கொண்டவை, அத்துடன் வீடுகளை கட்டி முடிப்பதற்கு இறுக்கமான நேர வரையறை விதிக்கப்பட்டிருக்காமை என்பனவாகும்.

## மேலதிக நிதியுதவி அணுகுமுறை

இந்த அணுகுமுறையின் கீழ் அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதி உதவிக்கு மேலாக வீட்டை பூரணப்படுத்துவதற்காக, கூட்டு நிதி உதவி, அரச சார்பற்ற நிறுவனங்கள் அல்லது அபிவிருத்தி பங்குதாரர்களினால் வழங்கப்படும் உதவியாகும். இந்த மேலதிக உதவியென்பது, நிதி உதவியாக அல்லது தொழில்நுட்ப உதவியுடன் அல்லது கட்டிடப் பொருள் உதவியாக இருக்கும். இந்த சந்தர்ப்பத்தில் மேலதிக உதவி வழங்க சம்மதம் தெரிவிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்கள் உதவி தொடர்பாக அரசாங்கத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த மேலதிக உதவி என அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து எதிர்பார்ப்பது முக்கியமாக நலிந்த குடும்பங்களுக்காகவேயாகும். ஏனெனில் இந்த திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் பயனாளிகளினது நிதி, சரீர உதவியை அவர்களினால் அளிக்க முடியாதுள்ள காரணத்தினாலேயேயாகும். விலையேற்றத்தின் தாக்கத்தை குறைக்கும் மார்க்கமாகவும் இந்நடைமுறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையை செயற்படுத்தும் பொழுது முக்கியமான செயற்பாட்டு குறைபாடொன்றை அனுபவ வாயிலாக உணரக் கூடியதாக உள்ளது. அது என்னவெனில், அரசாங்கத்தின் நிதி வழங்கும் நடைமுறைக்கும், இணை நிதி / உதவி வழங்கும் நிறுவனங்கள் நிதி வழங்கும் நடைமுறைகளுக்கும் இடையிலான ஒருமைத் தன்மையின்மையாகும். இதனை விட ஒரே மாதிரியான தொழில்நுட்ப ஆலோசனைகள் மேற்பார்வை, அறிக்கையிடல், கட்டிட முன்னேற்ற அறிக்கை, கொடுப்பனவு அட்டவணை, என்பன ஒரே தன்மையாக இருப்பது சுலபமான செயற்பாட்டுக்கும், இணை நிதியீட்ட பண உதவிக்கும் உதவியாக இருக்கும். எவ்வாறெனினும் இணை நிதி உதவி நடைமுறை கட்டிடப் பொருட்கள் உதவியை இணைப்பது கூடியளவு திறமையுடையதாகும்.

## உரிமையாளர் அரச சார்பற்ற நிறுவனங்களது பங்குதாரர் நடைமுறை

இந்த நடைமுறையில் அரச சார்பற்ற நிறுவனம் வேண்டிய தொழில்நுட்ப ஆலோசனைகளை பயனாளிகளுக்கு வழங்கி வீட்டை கட்டி முடிப்பதற்கான ஒரு வசதியளிப்பவராக பங்கேற்பதாகும்.இத் திட்டத்தின் கீழ் ஒப்பந்தக்காரர்கள் கட்டிடத்தை கட்டாத காரணத்தால், அரச சார்பற்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கட்டிட வரைபடத்தை தயாரிப்பாளராகவும், மேற்பார்வையாளராகவும் செயற்படுவர்.

இந் நடைமுறையின் கீழ் அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிலாளர்களைப் பயிற்றுவிப்பாளர்களாகவும், பயனாளிகளுக்கு கட்டிடம் தொடர்பான அடிப்படை அறிவை புகட்டுபவர்களாகவும் இருப்பதோடு, அரச சார்பற்ற நிறுவனங்கள் பயனாளியின் படம் வரைபவராகவும் சேவை புரிவர்.




அத்திவாரக் கட்டிடத்திற்கு நீரூற்றும் பயனாளி ஒருவர்

இந்த பங்குதார நடைமுறையை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு இரு நடைமுறைகள் அவசியமாகும். முதலாவது அரச சார்பற்ற நிறுவனங்கள் அந்த சமூகத்துடன் சிறந்த நல்லுறவை பேணுவதுடன் அந்த சமூக கலாச்சார, விழுமியங்களுக்கு நன்கு பரீட்சயப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். அத்தோடு, இத்திட்டத்தின் கீழ் பல வீடுகள் அந்தக் கிராமத்தில் மீள் நிர்மாணம் செய்யப்படுவதால், இந்த அணுகுமுறையின் கீழ் செயல்படுவதற்கும், அதன் மூலம், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களது சேவையை உச்சமாகப் பாவிப்பதற்கும், கட்டிடப் பொருட்களை முழுமையாக விரயம் இன்றி உபயோகிப்பதற்கும் சமூக அளவிலான ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவது அவசியமாகும்.

தொடர்ச்சி 7ம் பக்கம்...

## மாவட்ட ரீதியான நிதிமுன்னேற்றம் 30.11.2006 இல் உள்ளபடி




## மாவட்டரீதியாக சேதமுற்றவீடுகள் மற்றும் மீள்நிர்மாணம் செய்யப்படவுள்ள வீடுகளின் ஒதுக்கீடு பற்றிய விபரம்

| மாவட்டம் | சேதமுற்ற வீடுகளின் எண்ணிக்கை | மாவட்ட வீதாசாரம் % | மாவட்ட இலக்கு சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் | மாவட்ட இலக்கு ஐரோப்பிய ஆணைக்குழு |
|---|---|---|---|---|
| அம்பாறை | 11,342 | 3.9 % | 1,137 | 80 |
| மட்டக்களப்பு | 57,943 | 19.9 % | 5,816 | 200 |
| திருகோணமலை | 38,310 | 13.2 % | 3,845 | 130 |
| முல்லைத்தீவு | 22,871 | 7.9 % | 2,296 | 34 |
| யாழ்ப்பாணம் | 105,064 | 36.2 % | 1,0546 | 225 |
| கிளிநொச்சி | 27,363 | 9.4 % | 2,747 | 110 |
| மன்னார் | 20,082 | 6.9 % | 2,016 | 32 |
| வவுனியா | 7,640 | 2.6 % | 767 | 32 |
| புத்தளம்/உ.பா.வலயம் யாழ்ப்பாணம் | - | - | 2,100 | - |
| மொத்தம் | 290,615 | 100 % | 31,270 | 843 |

# சேர்ச் ஒப் சிலோனும் இணைந்தது

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டுவரும் சேர்ச் ஒப் சிலோன் (Church of Ceylon) என்ற நிறுவனமும் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்துடன் இணைந்துள்ளது.

இந்த அமைப்பின் நிதிஉதவியுடன் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவில் யுத்தம் காரணமாக வீடுகளை இழந்த சிங்கள, முஸ்லிம், மற்றும் தமிழ் சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்காக 45 வீடுகள் மீள்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன. மொறவெவ தெற்கில் சிங்கள மக்களுக்காகவும், றொட்டவெவவில் முஸ்லிம் மக்களுக்காகவும், ஔவைநகரில் தமிழ் மக்களுக்காகவும் 15 வீடுகள் வீதம் அமைப்பதற்கு இந்த நிறுவனம் நிதி உதவி வழங்குகின்றது.


யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சென்று தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறிய மக்களுக்காகவே இந்த உதவி வழங்கப்படுகின்றது. மீளக்குடியேறிய குடும்பங்களில் சேதமுற்ற வீட்டில் வாழ்கின்ற மாதம் ரூபா 2500/=க்கு குறைவான வருமானம் பெறுகின்ற, மற்றும் வீடு மீள்நிர்மாணம் செய்யப்படும் காணியின் உரிமையாளராக



பிரதேச செயலகத்தில் இடம்பெற்றமுதல்கட்ட கொடுப்பனவு நிகழ்வு


இருப்பவர்களிலிருந்து45 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டப் பிரமாணங்களுக்கு அமைவுற ரூபா 250,000/= நிதி உதவியாக கட்டம்கட்டமாக வங்கப்படுகின்றது.

## கட்டம் - II ன் கீழ் மாவட்ட ரீதியாக கூரை மட்டம்வரை கட்டிமுடிக்கப்பட்ட வீடுகள் பற்றிய விபரம்30.11.2006 இல் உள்ளபடி




# அபிவிருத்தி முனைப்புக்களுக்கான சந்தர்ப்பத்தை பேரழிவுகள் உருவாக்குகின்றன.

- நலிவடைந்த பிரதேசங்களை கோடிட்டுக் காட்டுகின்றது
- பொருளாதார சமூக மாற்றங்களுக்கு சாதகமான அரசியல் சூழ்நிலையை உருவாக்குகின்றது.
- நிதி நிறுவனங்கள் மூலமான மூலதன பாய்ச்சலுக்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.
- அனர்த்தத்தின் பொழுது அழிவுற்றுப் போன பேரழிவுதரக்கூடிய இடங்களில் மிகவும் பாதுகாப்பான புனர்நிர்மாணத்துக்கான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.



**அனர்த்தம் அபிவிருத்திக்கான சந்தர்ப்பத்தை வெளிக்கொண்டு வருகின்றது.**

இவ்வாறு பயனாளிகளாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான முதலாவது கட்டக் கொடுப்பனவு 2006 அக்டோபர் மாதம் 30 ஆம் திகதியன்று மொறவெவ பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்திற்கு ஆரம்ப நடவடிக்கையாக உலக வங்கி 75 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாகவும் இலங்கை அரசாங்கம் 2 மில்லியன் அமெரிக்க டொலரையும் வழங்கியிருந்தன. இதன்பின்னர் திட்டத்துடன் இணைந்து கொண்ட ஐரோப்பிய ஆணைக்குழு 6 மில்லியன் யூரோவை நன்கொடையாக வழங்கியதனைத் தொடர்ந்து தற்போது சேர்ச் ஒப் சிலோனும் வ.கி.வீ.மீ.திட்டத்துடன் இணைந்து செயற்பட முன்வந்துள்ளமை குறிப்பிடற்குரியதாகும்.

5ம் பக்க தொடர்ச்சி.......

இரண்டாவதாக அரச சார்பற்ற நிறுவனம், உள்ளூர் மூலப் பொருட்களை பாவிப்பதிலும், மனித வளத்தை உபயோகிப்பதிலும் தொழில்நுட்ப அறிவு கொண்டிருப்பதுடன் இந்த திட்டம் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்பதற்கு உள்ளூர் சமூகத்தின் தொழில்நுட்ப இயலளவை அதிகரிப்பதற்கான வளத்தை கொண்டிருத்தல் அவசியமாகும்.

## செயற்பாட்டு அணுகுமுறையின் பிரிவுகள் (Components)

திறமையாகவும், நிலைத்து நிற்கக் கூடியதுமான உரிமையாளர்களினால் செயற்படுத்தப்படும் வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு இத் திட்டம் பின்வரும் படிமுறைகளைக் கொண்டதாக இருப்பது அவசியம்.

### உள்ளடக்கப்படலும் சமமானதுமான அணுகுமுறை

மீள் நிர்மாணத் திட்டம் பாதிக்கப்பட்ட முழுக் குடும்பங்களையும் உள்ள டக்கப்பட்டதாகவும், நிதி நன்கொடை உதவி அனர்த்தத்தின் பொழுது ஏற்பட்ட பாதிப்பின் விகிதாசார தன்மை கொண்டதாகவும், மீள் கட்டுமாணத்திற்கான குறைந்தபட்ச ஒப்பீட்டு ரீதியான செயலையும் அடிப்படையாகக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். அதாவது பகுதியாக பாதிப்படைந்த வீடுகளுக்கும், முழுமையாகப் பாதிப்படைந்த வீடுகளுக்குமான உதவி நன்கொடை வேறான தொகையாக இருத்தல் வேண்டும். செலவு அடிப்படையில் கணிப்பீடு செய்து முழுமையாகப் பாதிப்படைந்த தற்காலிக வீடுகளுக்கு வேறாகவும், நிரந்தர கூரை உடைய வீடுகளுக்கு வேறானதாகவும் அவ்வீடுகளது குறைந்தபட்ச செலவு அடிப்படையில் இருக்க வேண்டும்.



### அழிவு மதிப்பீடு

அனர்த்தத்தின் பின்னரான மீள் நிர்மாணத் திட்டம் தொடர்பான தேவையை அளவீடு செய்வது பாதிப்படைந்த வீடுகளை மீள் நிர்மாணம் செய்வதுடன் தொடர்புடையதாகுமென்பதுடன், தொழில்நுட்ப ரீதியாக அழிவு மதிப்பீடு செய்யும் பொழுது சமூக பங்களிப்புடன் செய்யப்பட வேண்டும். சமூக ஒன்றிணைதல் (Mobilisation) செய்தி, தகவல் பரிமாற்றம், கல்வி என்பன தேவையான சில முக்கியமான சில பண்புகளாலும், இது வினைத் திறமை மிக்கதான சமூக பங்குபற்றலுக்கு தேவையானதாகும்.

தகுதியான குடும்பங்களை இனம் காணுவதற்கு காணி உரிமை, வாழ்விட உரிமை போன்ற பொதுவாக இனம் காணப்பட்டுள்ள உரிமை தொடர்பான பிரச்சினைகளுக்கு தொடர்ச்சியான அரசாங்கத்தின் வழிகாட்டலும், உதவியும் இதற்கு தேவையானதாகும்.



கட்டுமானப் பணிக்காக சீமெந்து கலவை தயார் செய்யும் பெண் பயனாளி ஒருவர்

### பயனாளிகளை முன்னுரிமைப்படுத்தல்

அனர்த்தத்தினால் ஏற்பட்ட அழிவின் அளவு, நிதி நிறுவனங்களினால் திரட்டக் கூடியதாகவிருந்த வளங்களது அளவு என்பவற்றின் அடிப்படையில் திட்ட இலக்குகளும், பயனாளிகள் முன்னுரிமைப்படுத்தலும் தீர்மானிக்கப்டுகின்றது. அழிவுத் தன்மையின் அளவு பயனாளிகள் இடையே இருக்கக்கூடிய சமூக பொருளாதார வளங்களின் அளவு என்பன பயனாளிகளை முன்னுரிமைப்படுத்துவதற்கான சில வழிகாட்டிகள் என்பதுடன், திட்ட உதவி பெறாத குடும்பங்கள் சில தாம் திட்டத்தில் உள்வாங்கப்படாமையையிட்டு நியாயப்படுத்துவதற்காக இந்த முன்னுரிமைப்படுத்தல் நடைமுறையில் சமூக கலந்துரையாடல் நடைமுறை முன்னிலைப்படுத்துகின்றது.

தொடர்ச்சி அடுத்த செய்திமடலில்

### வடக்கு கிழக்கு பிராந்தியத்திற்கான வீடமைப்பு நிதிச் சந்தை.



அடுத்து வெளிவரவிருக்கும் இல்லம் செய்திமடல் (ஜனவரி – மார்ச் - 2007) வடக்கு கிழக்கு பிராந்தியங்களுக்கான வீடமைப்பு நிதிச் சந்தை பற்றிய ஒரு ஆய்வுக்கட்டுரையைத் தாங்கிவரவுள்ளது. இக் கட்டுரை வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் தற்போது நிலவும் வீடமைப்பு நிதிச் சந்தை நிலைமைகள், அதற்கான கேள்வி மற்றும் நிரம்பல்கள், நடைமுறைப்படுத்தல் முறைமைகள் மற்றும் அமுலாக்கல் ஏற்பாடுகள் பற்றிய விபரங்களை உள்ளடக்கியதாக அமையவுள்ளது.

இக் கட்டுரையின் ஆசிரியர் திரு.எஸ். தம்பிப்பிள்ளை, ஒரு பட்டயக் கணக்காளராவார். இவர் வீடமைப்பு நிதித்துறை நிபுணராக விளங்கியவர். தற்போது வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் நிதிமுகாமைத்துவ ஆலோசகராகப் பணியாற்றிவருகிறார்.

# சுனாமி வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்

## கட்டம் I,II – மொத்தத் தொகை

**17.11.2006 ல் உள்ளபடி**

| மாவட்டம் | முற்றாகச் சேதமுற்ற வீடுகள் | பகுதியாகச் சேதமுற்ற வீடுகள் | மொத்தம் | வீட்டுக்குத் திரும்பியோர் | வீட்டுக்குத் திரும்பியோர் வீதம் |
|---|---|---|---|---|---|
| அம்பாறை | 7,722 | 6,296 | 14,018 | 7,419 | 53 % |
| மட்டக்களப்பு | 9,399 | 4,732 | 14,131 | 8,411 | 60 % |
| முல்லைத்தீவு | 5,457 | - | 5,457 | 465 | 9 % |
| யாழ்ப்பாணம் | 2,354 | 2,000 | 4,354 | 3,970 | 91 % |
| கிளிநொச்சி | 644 | - | 644 | - | 0 % |
| மொத்தம் | 25,576 | 13,028 | 38,604 | 20,265 | 52 % |

## முற்றாகச் சேதமடைந்த வீடுகள் கட்டம் I, II இணைந்த நிதியீட்ட விபரம்


**17.11.2006 ல் உள்ளபடி**

| மாவட்டம் | கட்டம் - I இணைந்த நிதியீட்டம் - முற்றாகச் சேதமுற்றது | கட்டம் - II இணைந்த நிதியீட்டம் - முற்றாகச் சேதமுற்றது | சு.வீ.மீ.தி. மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| அம்பாறை | 449 | 485 | 7,722 |
| மட்டக்களப்பு | 3,939 | - | 9,399 |
| முல்லைத்தீவு | 2,088 | 1,478 | 5,457 |
| யாழ்ப்பாணம் | 79 | - | 2,354 |
| கிளிநொச்சி | - | - | 644 |
| மொத்தம் | 6,555 | 1,963 | 25,576 |

## சுனாமி வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்

### பௌதீக முன்னேற்றம் - கட்டம் I, II


**17.11.2006ல் உள்ளபடி**




## சுனாமி வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்

### முன்னேற்றம் - கட்டம் II

**30.11..2006ல் உள்ளபடி**




# அழிவிலிருந்தும் ஆக்கம் பிறக்கிறது



சுனாமிப் பேரலையால் அழிவுற்றுப்போன வீடுகள்



சுனாமி வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ் மீள்நிர்மாணம் செய்யப்பட்ட வீடு


வெளியீடு : வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம்
பிரதம செயலாளர் செயலகம்
உட்துறைமுக வீதி , திருகோணமலை



தொலைபேசி : 026 -2224853, 026 -2227161
தொலைநகல் : 026 -2224854
மின்னஞ்சல் : pdnehrp@sltnet.lk